**கவனிக்க.**- *2024.05.10 ஆந் திகதிய 2384 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2385 - 2024 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2024.05.17**

*2385 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 218 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 222 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மே மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

217 - B 82570 - 353 (2023/05)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**இணைப்பு - 09**

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் அளிப்புப் பத்திரத்தை மறுத்தலுக்கான (104 பிரிவு) அறிவித்தல்.**

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் அகலவத்த பிரதேச செயலக பிரிவில் பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கிடையில்) காணி ஆணையாளர்/ உதவி காணி ஆணையாளர் சந்தரேகா நில்மினி வெல்கம ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் கௌரவ சனாதிபதியினால் 1984.12.17 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் களு/கி/3797 ஆம் அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான தியபத்தகம விதானலாகே சேனேரிஸ் என்பவருக்கு வழங்கப்பட்டு மத்துகம மாவட்ட பதிவகத்தில் இல. LDO99/178 இன் கீழ் 1998.07.13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட ஆதன அட்டவணையில் காணப்படும் காணிக்கு வாரிசாக சட்டரீதியாக உரிமை கோர இல்லாவிடின் அல்லது உரிமை உள்ளவர்கள் இருந்தாலும் அவர்/அவள் வாரிசாக வருவதற்கு விருப்பமற்ற வேளையில் வாரிசாக எந்த ஒரு நபரும் பதிவாகவில்லை என்ற காரணத்தினால் கூறப்பட்ட அளிப்புப் பத்திரம் மேலே உள்ள சட்டத்தின் 104 பிரிவின் கீழ் நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன். இது தொடர்பாக எதுவித எதிர்ப்பும் இருப்பின் அதனை 07.06.2024 திகதிக்கு முன் எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்கவும்.

**அட்டவணை**

களுத்துறை நிர்வாக மாவட்டத்தில் அகலவத்த பிரதேச செயலாளர் பிரிவில் கிழக்கு பஸ்துன் கோறளையில் 845 குருபிட கிராம உத்தியோகத்தர் பகுதியில் உள்ள குருபிட கிராமத்தில் அமைந்துள்ளதும் கலுகல மூகலான என அழைக்கப்படுவதும் நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு ................................ என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள .................... ஆம் இலக்க களத்தாளில் .............................. ஆம் இலக்க வரைபடத்தில்/அவர்களால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ 102 ஆம் இலகக் உருவப்படத்தில் 449 காணித்துண்டு என குறிப்பிடப்படுவதும் ........................ ஹெக்டயார்/ஏக்கர் : இல்லை றூட் : 03 பேர்ச்: 33 பரப்புள்ளதும் பின்வரும் எல்லைகளை கொண்டதுமான அரசாங்க காணித்துண்டு.

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | இ. கி. வ 102 லொட் 450 மற்றும் 445; |
| கிழக்கில் | : | இ. கி. வ 102 லொட் 450 மற்றும் 454; |
| தெற்கில் | : | இ. கி. வ 102 லொட் 448 மற்றும் 454; |
| மேற்கில் | : | இ. கி. வ 102 லொட் 445 (வீதி) மற்றும் 448. |

சந்தரேகா நில்மினி வெல்கம,
பிரதேச செயலாளர்,
அகலவத்த.

2023, மார்சு 04.

05 - 150

---

**இணைப்பு - 09**

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104) ஆம் பிரிவு தொடர்பாக அறிவித்தல்**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள கபுறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர் குஸலக்க நாணாயக்கார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1995.12.12. ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாற/10/பிர/26659 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் கீழ் உரிமையாளரான உல்லல கபுறுபிட்டிய எனும் முகவரியில் வசிக்கும் உடுகல்மொடேகே மெகிலின் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO 1489 ஆம் இலக்கத்தின் கீழ் 1993.03.05 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுளள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால்

அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற் கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2024.06.07 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெறிவிக்க வேண்டும்.

**மேற் கூறிய அட்டவணை**

தென் மாகாணத்தின் மாத்தறை நிருவாக மாவட்டத்தின் கபுறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் கங்கபட பத்துவவின் உல்லல மேற்கு கிராம அலுவலர் பிரிவின் உல்லல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட வெளிக்கள தாள் இலக்கம் ................. இ. கி. ப. இல. .................. படத்தில் பட இலக்கம் ............... இல் விஸ்தீரணம் சுமார் 01 ஏ 00. றூட். 04 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :- மாஸ்முல்ல காடு

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | பெலிகவத்த காணி; |
| கிழக்கில் | : | யூ. எம். சிசிலியஸ் என்பவரின் காணி; |
| தெற்கில் | : | ஆரன்ய வீதி; |
| மேற்கில் | : | பெலிகவத்த காணி. |

குஸலக நாணாயக்கார,
பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்,
கம்புறுப்பிட்டி.

2023, திசெம்பர் 20.

05 - 151

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்து செய்தல் - (104 ஆம் பிரிவின்) கீழான அறிவித்தல்.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தின் ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலக பிரிவின், பிரதேச செயலாளர் ஈ.ஏ.டி.எம். அத்துகோரள ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) வது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி யினால் 1990.09.25 ஆம் திகதி வழங்கப்பட்ட இலக்கம் புத்/பிர 13707 எனும் இலக்கத்தை கொண்ட அழிப்பு பத்திரமானது உரிமையாளரான பஹல அத்தங்கன்யா அத்தங்கனய எனும் இடத்தில் வசிக்கும் எதிரிசிங்க ஆராச்சிகே உக்குமானிகா வுக்கு வழங்கப்பட்டு, சிலாபம் மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் இலக்கம் ஆர 8/202 இன் கீழ் 1993.12.17 திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள, காணிக்கு பின்னுரித்தாளியாவதற்கு விருப்பமின்மை காரணமாக பின்னுரித்தாளர் ஒருவரை நியமிப்பதற்கு எவரும் இல்லாது இருப்பதால் அந்த அளிப்புப் பத்திரத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2024.06.07 திகதிக்கு முன்பதாக எனக்கு தெரியப்படுத்த வேண்டும்.

**அட்டவணை**

பன்குலாவ கிராமத்தில் அமைந்துள்ள, 592 எஃப் பஹல் அட்டங்கனை கிராம அலுவலர் பிரிவுகள், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பரிவு, புத்தளம் நிர்வாக மாவட்டம், வடமேற்கு மாகாணம், இதன் பரப்பளவு லொட் எண் என காட்டப்பட்டுள்ளது. சர்வே ஜெனரலால் தயாரிக்கப்பட்ட பீ. பீ. பூ. 81 திட்டத்தில் 110 மூன்று ஏக்கர், ஐந்து பேர்ச் (ஏக்கர். 03, 05 பேர்ச்) வடக்கில்:- வெஹெ‌ன கும்புர மற்றும் நிலம் தாங்கிய நிலம். 22, கிழக்கே: நிலம் எண். 24 மற்றும் 23, தெற்கே: கிராம சபை சாலை மற்றும் மேற்கு நோக்கி: லாட் எண். 27 நிலம் லொட் எண் எனக் காட்டப்பட்டுள்ளது. திட்ட எண் 02 இல். 592 எப் பஹல அத்தங்கனய சர்வேயரால் மறுஅளவீடு செய்யப்பட்டு, இரண்டு ஏக்கர், ஐந்து பேர்ச் (02 ஏக்கர், 05 பேர்ச்) அளவுள்ள அரச காணி, கீழ்கண்டவாறு எல்லைப்படுத்தப்பட்ட அரச காணி.

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | பீ. பீ. பூ 81ன் பகுதி எண். 109 மற்றும் 168 (பிரதேச சபா சாலை); |
| கிழக்கில் | : | பகுதி எண். 168 (பிரதேச சபா சாலை) மற்றும் பீ. பீ. பூ 81 லாட் எண். 141, 142; |
| தெற்கில் | : | பீ. பீ. பூ. 81 இன் லொட் எண். 141, 142 மற்றும் பிளான் 1729 ஆன் லாட் எண். 01; |
| மேற்கில் | : | திட்டம் எண். 1729 இன் பகுதி எண். 01 மற்றும் பீ. பீ. பூ. இன் லாட் எண். 109. |

ஈ. ஏ. டி. எம். அத்துகோரல,
பிரதேச செயலாளர்,
ஆராச்சிக்கட்டுவ.

2023, நவெம்பர் 06.

05 - 176

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (பிரிவு 104) இற்கான அறிவித்தல்.

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின், நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் ஜயசிங்க ஆரச்சிகே விஜாநி வசந்திகா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2006.06.26 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் புத்/நாத்/பிர/74626 எனும் அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளராகிய சந்தனன்கம, துன்கன்னாவ பிரதேசத்தில் வசிக்கும் விக்கிரம ஆரச்சிகே ரீட்டா விவியன் ரஞ்ஜனி அவர்களுக்கு, மாரவில மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் புத்/நாத்/46/41 கீழ் 2006.08.31 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் வரும் அட்டவணையில் காட்டப்படும் காணிக்கு உரிமை கோரும் பொருட்டு சட்டரீதியான உரித்தாளி எவரும் இல்லாதவிடத்து அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்தும் அவர் உரிமையாளி ஆகுவதற்கு விரும்பாத போது உரிமை கோர எவரும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்த அளிப்புப் பத்திரத்தை மேற் கூறிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அதனை 2024.06.07 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

### அட்டவணை

புத்தளம் நிர்வாக மாவட்டத்தின் நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவின்தெற்கு பிடிகல் கோரலே 505/B துன்கன்னாவ கிராம அலுவலர் பிரிவின் சந்தனன்கம, எனும் பெயரிலான கிராமத்தில் அமைந்துள்ளதும், புத்தளம் நில அளவை அதிகாரியின் கீழுள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட இலக்கம் மு. பி. பு. 4272 ஐ கொண்ட வரைபடத்தின் இலக்கம் 02 உடைய நிலத் துண்டாக காட்டப்பட்டுள்ளதும் அளவில் ஹெக். 0.129 விஸ்தீணத்தை கொண்டதும் குருகொடல்ல அல்லது தங்கஸ் அகார காடும் மற்றும் கீழே காட்டப்படும் அடிப்படையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி.

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | மு. பி. பு. 3098 இன் துண்டு இலக்கம் 1, 2 மற்றும் 3; |
| கிழக்கில் | : | துண்டு இலக்கம் 3, மற்றும் பீ. பீ. ஏ. 1732 இன துண்டு இலக்கம் ஆர். 8506; |
| தெற்கில் | : | பீ. பீ. ஏ. 1732 இன் துண்டு இலக்கம் ஆர். 8506; |
| மேற்கில் | : | துண்டு இலக்கம் 1. |

ஜயசிங்க ஆரச்சிகே விஜாநி வசந்திகா,
பிரதேச செயலாளர்,
நாத்தாண்டிய.

2023, யூலை 07.

05 - 177

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் பிரிவு 19 இன் துணைப் பிரிவு (4) இன் கீழ் வழங்கப்பட்ட மானிய பத்திரத்தை இரத்துச் செய்வது (பிரிவு 104) சம்பந்தமான அறிவிப்பு.**

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் பலப்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையேயான) ரத்ன மலல இருகல் பண்டாரலாகே மாலக சதுரங்க பண்டார ஜயசிங்க ஆகிய நான், காணி அபிவிருத்திச் சட்டத்தின் உப பிரிவு 19 (4) இன் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் 30.03.1982 ஆந் திகதி வழங்கப்பட்ட கா/பி 502, LL 35859 ஆம் இலக்கமுடைய பிரதான பத்திரத்தின் உரிமையாளரான பெலேகஸ்பலாதவை வசிப்பிடமாக கொண்ட லத்துவாஹன்தி அமரதாச டி சில்வா என்பவருக்கு வழங்கப்பட்டு பலப்பிட்டி மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் இல. 531 இன் கீழ் 01 ஆகஸ்ட் 1991 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டிருக்கும் கீழுள்ள துணை ஆவணத்தில் காட்டப்படும் காணிக்கு வாரிசுரிமை பெறுவதற்காக சட்டரீதியான உரிமையாளர் இல்லாமல் இருப்பதாலோ அல்லது உரிமையுரடயவர் இருந்தும் அவர்/அவர்கள் வாரிசுரிமை பெறுவதற்கு விருப்பமின்மையால் வாரிசுரிமைக்காக ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு இல்லையென அறிவிக்கப்பட்டிருப்பதால் அதற்கான உரிமைப் பத்திரம் குறித்த சட்டத்தின் பிரிவு 104 இன் கீழ் இரத்துச் செய்வதற்காக செயற்பட்டு வருவதாக அறியத்தருகிறோம். இது சம்பந்தமாக ஏதாவது எதிர்ப்பு இருப்பின் அதை 2024.06.07 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தர வேண்டும்.

**அந்த துணை ஆவணம்**

காலி நிர்வாக மாவட்டம் பலப்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவு பெந்தோட்டை வலல்லாவிட (மேற்கு) கோரளை 16ஏ பெலேகஸ்பவாதை கிராம சேவையாளர் பிரிவில் பெலேகஸ்பலாதை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், சர்வேயர் ஜனராலின் கீழ் உள்ளதும் மற்றும் சர்வேயர் ஜனரால் மூலம் தொகுக்கப்பட்ட இல. 07/38 உடைய துறைசார் பத்திரத்தின்/- மூலம் தொகுக்கப்பட்ட இல. மு. பி. கா 567 உடைய பகுதி பிரிக்கும் நிலத்தில்/- மூலம் தொக்கப்பட்ட இல. - உடைய வரி வரைபட இல. 7 உடைய நிலப் பகுதியாக காட்டப்பட்டு உள்ளதுமான, அளவில் ஹெக்டயார்/ஏக்கர் இல்லை ரூட் மூன்று (3) பர்சர்ஸ் இருபத்தொன்பது (29) பரப்பளவுடையதுமான, கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லை உடையதுமான, அரசாங்க காணி: புவக்ககபொக்கவத்தை.

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | க. மா. மு. பி 36 இல் பகுதி இல. 83; |
| கிழக்கில் | : | இந்த நில அளவைப் படத்தில் பகுதி இல. 08; |
| தெற்கில் | : | இந்த நில அளவைப் படத்தில் பகுதி இல. 39; |
| மேற்கில் | : | இந்த நில அளவைப் படத்தில் பகுதி இல. 6 |

ஆர். எம். ஐ. பி. எம். சி. பி. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
பலப்பிட்டி.

2024, சனவரி 26.

05 - 214/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவில் (4) ஆவது உப பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட மானியப் பத்திரத்தை இரத்து செய்வதற்கான- (104 பிரிவு) அறிவித்தல்.**

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் பலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில், பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையேயான) ரத்ன மலல இருகல் பண்டாரலாகே மாலக சதுரங்க பண்டார ஜயசிங்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1997, யூலை 30 ஆந் திகதி வழங்கப்பட்ட கா/4/ பிர 53175, எல். எல். 23837 ஆம் இலக்கத்தைக் கொண்ட மானியப் பத்திரத்தின் உரிமையாளரான, அஹூங்கல்ல பதிராஜகமவில் வசிக்கும் அறுமாவசம் சமரசேன என்பவருக்கு வழங்கப்பட்டு பலபிடிய மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் LDO 3449 ஆம்

இலக்கத்தின் கீழ் 1997.09.22 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு வாரிசாக சட்ட ரீதியான உரித்தாளி அற்றமையாலோ அல்லது உரித்துடையவர் இருப்பினும் அவர் வாரிசு ஆவதற்கு விரும்பாமையாலோ வாரிசாக ஒருவர் பெயரிடப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளதால், அந்த கொடுப்பனவுப் பத்திரம் மேற்படிச் சட்டத்தில் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2024.06.07 ஆம் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில் பலபிடிய பிரதேச செயலகப் பிரிவில் பெந்தரை வலல்லாவிட (மத்திய) பத்துவில்/கோரளையில் 24 ஈ பதிராஜகம கிராம அலுவலர் பிரிவில் பதிராஜகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ளதும் மற்றும் நில அளவையாளர் நாயகத்தின் தொகுப்பு இலக்கம் 07/53 ஐக் கொண்ட களப் படிவத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தொகுப்பு இலக்கம் பீ. பீ. ஏ. 1558 ஐக் கொண்ட காணி துண்டாக்குதல் வரைபடத்தில்/ .......................... இனால் தொகுப்பு இலக்கம் ............................... ஐக் கொண்ட ரேகைக் குறிப்பு இலக்கம் 39 ஐக் கொண்ட காணித் துண்டாக காட்டியுள்ள, பருமனில் ஹெக்டேயர்/ஏக்கர் ................. 01 றூட், 14.2 பேர்ச் பரப்பைக் கொண்டதும், பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி கொஸ்கஹகேன.

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | பீ. பீ. ஏ. 1558 வரைபடத்தில் து. இல. 22; |
| கிழக்கில் | : | பீ. பீ. ஏ. 1558 வரைபடத்தில் து. இல. 38; |
| தெற்கில் | : | பீ. பீ. ஏ. 1360 வரைபடத்தில் து. இல. 20; |
| மேற்கில் | : | பீ. பீ. ஏ. 1558 வரைபடத்தில் து. இல. 40. |

பிரதேச செயலாளர்,
பலப்பிட்டி.

2023, ஒற்றோபர் 09.

05 - 214/2

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72952
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: ALC/KG/D/2/1/2/49.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

கேகாலை மாவட்டம், கலிகமுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 68B, ரானபான கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த மொணராகல கிராமத்தின் பீ. பீ. ஏ. இல. 1139 இனது காணித்துண்டு இல. 4 இனது பகுதியினைக் குறித்துக் காட்டுவதற்காக பதிவு செய்யப்பட்ட சான்றிதழினையுடைய நிலஅளவையியலாளரினால் வரையப்பட்ட நிலவரைபடத்தின் மூலம் காட்டப்படுகின்ற 0.0505 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு மொபிட்டல் பிரைவைட் லிமிட்டெட் கம்பனியின் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பீ. பீ. ஏ. இல. 1139 இனது காணித்துண்டு இல. 03;
கிழக்கு : பீ. பீ. ஏ. இல. 1139 இனது காணித்துண்டு இல. 04 இனது எஞ்சிய பகுதி;
தெற்கு : பீ. பீ. ஏ. இல. 1139 இனது காணித்துண்டு இல. 04 இனது எஞ்சிய பகுதி;
மேற்கு : பீ. பீ. ஏ. இல. 1139 இனது காணித்துண்டு இல. 04 இனது எஞ்சிய பகுதி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.03.20 ஆம் திகதியிலிருந்து 2053.03.19 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்.-** 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்.-** தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்.

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2024.03.20 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் நிலுவைப் பணத்திற்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்தி லிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ராஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 20.

05 - 149

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/70702.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: LCD/16/LND/28/02/FI/110.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பலங்கொட பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான லியன்கஸ்தொட்ட கிராம அலுவலர் பிரிவின் லியன்கஸ்தொட்ட கிராமத்தின் நில வரைபட இலக்கம் 230 இன் காணித்துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 05 ஏக்கர் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு என். ஆர். எக்ரி வின்சன் தனியார்கம்பனி மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : டீ. எம். வீரசிங்க மற்றும் பீ. ஜீ. சயான் ஆகியோரது காணி;
கிழக்கு : பீ. ஜீ. சயானின் காணி மற்றும் பாதை ஒதுக்கம்;
தெற்கு : பீ. ஜீ. யுரேஷ் மதுசானின் காணி;
மேற்கு : ஆர். ஜீ. வில்சனின் காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால்

நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.11.15 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்.

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.11.15 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இருந்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 22.

05 - 152

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74488.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/26/KG/L/199.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொணராகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 146B, தெட்டகமுவ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கொச்சிப்பத்தன கிராமத்தின் அதிகாரம்பெற்ற அளவையியலாளர் கே. எம். சி. கௌசல்ய என்பவர் மூலம் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 0103 இன் காணித்துண்டு Aஇன் மூலம் காட்டப்பட்டுள்ள 00 ஏக்கர், 02 றூட், 27.2 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திரு. களுதந்திரிகே சந்திரல லசித் பெரேரா என்பவர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வீதி ஒதுக்கம்;
கிழக்கு : எச். எல். சுகி பிரகீத் என்பவரினுடைய காணி;
தெற்கு : மாதக்கட வீதி ஒதுக்கம்;
மேற்கு : எஸ். டப். பிரியந்தியினுடைய காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 இலிருந்து 2053.10.09 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகாரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் வருடத்தில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்.

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.10.10 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 30.

05 - 209

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75047.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/26/KG/L/257.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொணராகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 146B, தெட்டகமுவ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கொச்சிப்பத்தன கிராமத்தின் குடியேற்ற அலுவலர் மூலம் வரையப்பட்ட நிலவரைபட இல. UVA/MO/KTG/LND/LTL/146B/COM/571 இன் மூலம் காட்டப்பட்டுள்ள

00 ஏக்கர், 03 றூட், 10 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை வாணிப நடவடிக்கைளின் பொருட்டு திரு. உபுல் கோசல கிரிவென்தல என்பவர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வீதி மற்றும் கால்வாய் ஒதுக்கம்;
கிழக்கு : லலித் என்பவர் அனுபவிக்கின்ற காணி;
தெற்கு : நாலக என்பவர் அனுபவிக்கின்ற காணி;
மேற்கு : சுரங்க வீ. ஏ. கே. நிரோசா தர்சனி என்பவர் அனுபவிக்கின்ற காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.11.15 இலிருந்து 2053.11.14 வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்.

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.11.15 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்மானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ராஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 30.

05 - 210

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75024.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: SPLC/MAT/3/33/3/161.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம், வெலிகம பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் மிரிஸ்ஸ தெற்கு II 406 ஏ கிராம அலுவலர்

பிரிவின் மிரிஸ்ஸ கிராமத்தில் அமையப் பெற்றிருக்கும் ஆ. நி. மா 1711 இன் துண்டு இலக்கம் 50 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 15.44 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. நந்தசேன செல்லஹேவா என்பவர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : துண்டு இலக்கம் 44 மற்றும் 118;
கிழக்கு : துண்டு இலக்கம் 118 மற்றும் 51;
தெற்கு : ஆ. நி. மா 1711 இன் முதலாவது காணித் துண்டு மற்றும் துண்டு இலக்கம் 44;
மேற்கு : துண்டு இலக்கம் 51 மற்றும் ஆ. நி. மா 1711 இன் முதலாவது காணித் துண்டு.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழ்க் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2024.04.08 ஆம் திகதியிலிருந்து 2054.04.07 ஆம் திகதி வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்.

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2024.04.08 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணத்தைத் தொடர்ச்சியாக செலுத்தாத காலப்பகுதிக்குள் மிகுதியாகக் காணப்படும் நிலுவை குத்தகைப் பணத்தின் பொருட்டு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 25.

05 - 211

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72975.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொணராகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 146A செல்லக்கதிர்காமம் கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த 20 ஏக்கர் செல்லக்கதிர்காமம் கிராமத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையியலாளர் எம். பீ. ரஞ்சித் ஆனந்த என்பவர் மூலம் அளந்து வரையப்பட்ட 5125 ஆம் இலக்க நிலவரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் A மற்றும் B இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 02 ஏக்கர், 00 றூட், 10 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு துய்யா ஹென்னதிகே சரத் குமார என்பவர் குத்தகக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : லக்ஸ்மன் என்பரின் காணி;
கிழக்கு : சமித் என்பவரின் காணி;
தெற்கு : 10 ஏக்கர் பாதை ஒதுக்கம்;
மேற்கு : நிலந்தி என்பவர் உரிமை கோரும் காணி.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆந் திகதியிலிருந்து 2053.10.09 ஆந் திகதி வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன் படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.10.10 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமித்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 30.

05 - 212

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/70192.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/26/KG/L/171.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொணராகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 146B, தெட்கமுவ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த மெனிக்புரகம கிராமத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையியலாளர் திரு. கே. டப். எஸ். கே. விக்னராஜா என்பவர் மூலம் வரையப்பட்ட நிலவரைபட இல. MO 414 இன் காணித் துண்டு 02 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 01 றூட், 20 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு லியனகமகே ஷிரான் பிரசங்க என்பவர் மூலம் குத்தகக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : சுனில் டீ ரூம் என்பவரினுடைய காணி மற்றும் வீதி ஒதுக்கம்;
கிழக்கு : வீதி ஒதுக்கம் மற்றும் சேனாரத்ன என்பவரினுடைய காணி;
தெற்கு : சேனாரத்ன என்பவரினுடைய காணி;
மேற்கு : சேனாரத்ன என்பவரினுடைய காணி மற்றும் சுனில் டீ ரூம் என்பவரினுடைய காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 இலிருந்து 2053.10.09 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% பேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்.

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.10.10 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 30.

05 - 213

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.